FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~குற்றவியல் நடைமுறைச் சட்டம் 154 இன் கீழ்~~

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

8081645

DSP IV Cell Dgl

Under Section 173 BNSS

1. District : திண்டுக்கல் மாவட்டம் PS: காவல்நிலையம் VAAC Year: ஆண்டு 2025 FIR No.: முத.அ. எண் 08/2025 Date: நாள் 29.07.2025

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: 1988 as amended in 2018. Sections பிரிவுகள்: —

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: —

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 17.07.2025, 19.07.2025 Date to : நாள் வரை 21.07.2025 and 24.07.2025

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Over mobile phone 25.07.2025 at 13.00 hrs 28.07.2025 at 14.00 hrs -and 14.45 hrs Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : நேரம்

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 29.07.2025 at 08.00 hrs Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் திண்டுக்கல் மாநகர் மேற்கு அலுவலகம், சுமார் 30 கி.மீ வடகிழக்கு

Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —

இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : P. ஆண்டவேல் குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் (b) Father's/ Husband's Name : பெருமாள் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 36/2025 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —

(f) Occupation : தொழில் விவசாய கூலி (g) Address : முகவரி ஆலம்பட்டி, கிடையம்பட்டி அஞ்சல், திண்டுக்கல் மாநகம், திண்டுக்கல்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)

தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்

(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திருமதி. ராஜேஸ்வரி, நிர்வாக உதவியாளர், திண்டுக்கல் மாநகம் - மேற்கு அலுவலகம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:

குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித் தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லைபைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P. துணிச்சல்

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

C. Muthukumar 29/07/25

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

29.07.2025 - 10.20 hrs.

Name: பெயர் ப. பழனிச்சாமி
Rank: நிலை ..... No. எண் .....
காவல் உதவியாளர்
வழக்கு பதிவு மற்றும் கணினிப்பதிவு முடிவு
நிலை.

திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:08/2025 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

Column No.12, FIR Contents:-

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 29.07.2025-ம் தேதி காலை 08.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது திண்டுக்கல், செங்குறிச்சி கிராமம், சடையம்பட்டி(அஞ்சல்), ஆலம்பட்டியில் வசிக்கும், பெருமாள் என்பவரது மகன் P.ஆண்டிவேல் தஎன்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று 29.07.2025-ம் தேதி காலை 07.15 மணிக்கு கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்.P.ஆண்டிவேல், வயது 36/2025, த/பெ.பெருமாள், ஆலம்பட்டி, சடையம்பட்டி(அஞ்சல்), செங்குறிச்சி கிராமம், திண்டுக்கல், பெறுநர்.துணைக் காவல் கண்காணிப்பாளர், இலஞ்ச ஒழிப்புத்துறை, திண்டுக்கல். அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்கு திருமணமாகி 4 குழந்தைகள் உள்ளனர். விவசாயகூலி வேலை பார்த்து வருகிறேன். கடந்த 20.05.2025 அன்று திண்டுக்கல் மாவட்டம், வடமதுரை ரோட்டில் ஆலம்பட்டி என்ற கிராமத்தின் அருகே நடந்த ஒரு வாகனவிபத்தில் எனது தந்தை திரு.பெருமாள் அவர்கள் காயம்பட்டு மதுரை .அரசு ராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி கடந்த 29.05.2025 அன்று இறந்துவிட்டார். இது தொடர்பாக வடமதுரை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. எனது தந்தை திரு.பெருமாள் அவர்கள் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தில் உறுப்பினராக இருந்தார். அதன் பதிவு எண். DNG/AP 172/0324 என்பதாகும். இதனால் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் உறுப்பினராக உள்ளவர் இறந்துவிட்டால் ரூ.1 லட்சம் உதவித்தொகை அரசு வழங்குகிறது என்ற விபரம் எனக்கு தெரியவந்தது. அதனால் மேற்படி திட்டத்தின் கீழ் உதவித்தொகை வழங்கிட வேண்டி எனது பெயரில் விண்ணப்பம் தயார் செய்து அத்துடன் எனது தந்தையின் பெயரில் பதிவு செய்யப்பட்ட உழவர் பாதுகாப்பு திட்ட அட்டையின் நகல், இறப்புச் சான்றிதழ் உள்ளிட்ட ஆவணங்களை இணைத்து கடந்த 15 நாட்களுக்கு முன்னர் சுமார் காலை 11 மணியளவில் செங்குறிச்சி கிராம நிர்வாக அலுவலகம் சென்று அந்த அலுவலகத்தில் பணியிலிருந்த கிராம உதவியாளர் திருமதி.ராஜேஸ்வரி என்பவரிடம் கொடுத்தேன். அதனை பெற்றுக்கொண்ட கிராம உதவியாளர் திருமதி.ராஜேஸ்வரி அவர்கள் எனது மனுவை பார்த்துவிட்டு அவரே எல்லா அதிகாரிகளிடமும் கையொப்பம் பெற்று உதவித்தொகை ரூ.1 லட்சத்தினை பெற்றுத்தருகிறேன் என்றும் அவ்வாறு செய்ய வேண்டுமென்றால் அவருக்கு லஞ்சமாக ரூ.30 ஆயிரம் கொடுக்க வேண்டும் என்றும் என்னிடம் கேட்டார். அதற்கு நான் அவரிடம் கூலி வேலை செய்து வருவதால் அவ்வளவு பணம் புரட்ட முடியாது என்றும் கூறினேன். அதற்கு அவர் ரூ.5,000/-ம் குறைத்துக்கொண்டு ரூ.25,000/-ம் லஞ்சமாக கொடு நான் எல்லா வேலையையும் முடித்து உதவித்தொகை கிடைக்க ஏற்பாடு செய்கிறேன் என்று கூறினார். என்னிடம் அவ்வளவு பணம் இல்லையென்று கூறிவிட்டு வந்துவிட்டேன். அதன் பின்னர் இந்த மாதத்தில் 17,19,21,24 ஆகிய தேதிகளில் அவரது மொபைல் எண்.7339026065 என்ற எண்ணிலிருந்து எனது மொபைல் எண்.7639428417 என்ற எண்ணுக்கு பல முறை தொடர்பு கொண்டு பணம் தயார் செய்து விட்டாச்சா என்று கேட்டார். பின்னர் கடந்த 25.07.2025 அன்று மதியம் சுமார்

01.00 மணியளவில் செங்குறிச்சி VAO அலுவலகம் சென்று அங்கிருந்த கிராம உதவியாளர் திருமதி.ராஜேஸ்வரி அவர்களிடம் எனது மனுவின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கேட்டேன். அதற்கு திருமதி.ராஜேஸ்வரி அவர்கள் VAO அவர்களிடம் கையெழுத்து வாங்கிவிட்டதாகவும், ஏற்கனவே கேட்ட லஞ்ச பணம் ரூ.25,000/-த்தை தயார் செய்து கொடுத்தால் மற்ற அதிகாரிகளிடம் கையொப்பம் பெற்று வேலையை முடித்து தருகிறேன் என்று கூறினார். அதற்கு நான் அவ்வளவு பணம் தயார் செய்து தர முடியாது என்று கூறினேன். அதற்கு திருமதி.ராஜேஸ்வரி அவர்கள் ரூ.5,000/-த்தை இப்பொழுது கொடு மீதிப்பணத்தை அப்புறமாக வாங்கிக் கொள்கிறேன் என்றார். அதற்கு நான் என்னிடம் எந்தப் பணமும் இல்லை, யாரிடமாவது கடன் வாங்கித்தான் கொடுக்க முடியும். எப்படியாவது ரூ.5,000/-த்தை தயார் செய்து தருகிறேன், மீதிப்பணம் ரூ.20,000/-த்தை மாட்டு லோன் வாங்கித் தருகிறேன் எனது மனுவின் மீது விரைந்து நடவடிக்கை எடுங்கள் என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். அதன் பின்னர் 28.07.2025 மதியம் 02.00 மணியளவில் நான் குடியிருக்கும் ஆலம்பட்டியில் உள்ள எனது வீட்டிற்கு திருமதி.ராஜேஸ்வரி அவர்கள் வந்தார். அங்கு வந்த அவர் என்னிடம் ரூ.5,000/-ம் பணம் தயார் செய்துவிட்டாச்சா, இருந்தால் கொடு, அப்போதுதான் RIயிடம் கையெழுத்து வாங்கி தாசில்தாருக்கு அனுப்ப முடியும் என்றும் கூறினார். அதற்கு நான் பணம் தயார் செய்யவில்லை என்றும் எனது சித்தப்பாவிடம் பணம் கேட்டுள்ளதாகவும், அவர் கொடுத்தால்தான் தரமுடியும் என்றும் கூறினேன். அவரும் பணத்தை தயார் செய்துவிட்டு செங்குறிச்சி VAO அலுவலகத்தில் வந்து கொடுக்குமாறு கூறிவிட்டு சென்றுவிட்டார். அதன் பின்பு சுமார் 2.45 மணிக்கு 7339026065 என்ற எண்ணிலிருந்து எனது மொபைல் எண். 7639428417க்கு அழைத்து பணம் ரூ.5,000/-த்தை தயார் செய்துவிட்டு நாளை காலை செங்குறிச்சி VAO அலுவலத்தில் வந்து அவரிடம் கொடுக்குமாறு கூறிவிட்டு வைத்துவிட்டார். வாகன விபத்தில் இறந்துவிட்ட எனது தந்தைக்கு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்பட வேண்டிய உதவித்தொகை ரூ.1 லட்சத்தினை பெற ரூ.25,000/-த்தை லஞ்சமாக கொடுத்து வேலையை முடிக்க விருப்பமில்லை. சட்டப்பூர்வ பணியை செய்து தருவதற்காக ரூ.25,000/-ம் லஞ்சமாக கேட்டு, முன்பணமாக ரூ.5,000/-ம் லஞ்சம் கொடுக்கச் சொல்லும் செங்குறிச்சி VAO அலுவலக கிராம உதவியாளர் திருமதி.ராஜேஸ்வரி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன். இந்த புகாருடன் எனது தந்தையின் பெயரில் உள்ள முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்ட அடையாள அட்டையின் நகலை இணைத்துள்ளேன். மேலும் செங்குறிச்சி கிராம நிர்வாக அலுவலகத்தில் பணிபுரியும் கிராம உதவியாளர் திருமதி.ராஜேஸ்வரி லஞ்சமாக கேட்ட பணம் ரூ.5,000/-ம் கொண்டு வந்துள்ளேன், நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd/- xxxxx (P.Andivel, 29.07.2025)

Sir, Received the complaint on 29.07.2025 at 08.00 Hrs and made a Confidential Verification on the general reputation of the accused, the motives, reliability and antecedent of the complainant and came to know that nothing adverse against the complainant and the reputation of the accused is learnt to be not good. Hence, a case in Dindigul V&AC, Cr.No.08/2025, u/s.7(a) of the Prevention of Corruption Act 1988, as amended in 2018, was registered today at 09.00 hrs and took up

investigation. Sd/-xxxxx (P.Palanisamy, Inspector of Police, V&AC, Dindigul 29.07.2025).

Original FIR along with Computer Typed complaint of Tr.P.Andivel, Age.36/2025, S/o.Perumal, Alampatti, Sadayampatti Post, Senkuruchi Village, Dindigul and with the relevant documents are submitted to the Hon'ble Principle District Sessions Judge Court, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

29/07/25

(P.Palanisamy),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Dindigul